[12th August 1963

திரு. ஜே. மாதா கவுடர் : புதிதாக போலீஸ் லைன் கட்டும்போது அந்த வீடுகளுக்கு மின்சார விளக்கு வசதியும் செய்து கொடுக்கப் படுகிறதா? போலீஸ்காரர்கள் உபயோகப்படுத்திக்கொள்கிற மின்சாரத்திற்கும் அவர்கள் கட்டணம் கட்டவேண்டாமென்று வசதி செய்து கொடுக்க முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : துணை மதிப்பீடு விவாதத்தில் இதுபற்றிப் பேசப்பட்டது. அப்பொழுதே சொன்னேன். புதிதாகக் கட்டப்படுகிற வீடுகளுக்கு மின்சாரம் அளிக்கப்பட்டுத்தான் வருகிறது.

திரு. எம். எஸ். மணி : துறையூரில் போலீஸ் லைன் கட்டுவதற்கு அடிமனைக்கு பதினோராயிரம் ரூபாய் கொடுத்தது தவறு என்கிற புகார் வந்திருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நில ஆர்ஜித சட்டப்படிதான் இந்த நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. சட்டப்படி மதிப்பிடப் பட்டு, அதற்குப் பிறகு சொலேஷீயம் எல்லாம் நிர்ணயித்துக் கொடுக்கப்படுகிறது. ஆகவே இதில் எதுவும் ஆட்சேபணை இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. முனு ஆதி : போலீஸ் லைன் கட்டுவதற்கு மத்திய சர்க்கார் மானியம் தருகிறதா? அல்லது மாநில சர்க்காரே முழுச் செலவையும் ஏற்றுக் கொள்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மத்திய சர்க்கார் கடன்தான் கொடுக்கிறார்கள்.

திரு. ஆர். ரெங்கசாமி : சிலவிடங்களில் போலீஸ்காரருக்கு லைன் மாத்திரம் கட்டிக் கொடுக்கப்படுகிறதே தவிர, போலீஸ் ஸ்டேஷன் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுவும் கவனிக்கப்பட்டு வருகிறது.

சேலம் இரும்பு தொழிற்சாலை.

* 102 **கேள்வி.— திரு. எஸ். ஆறுமுகம் : கனம்** கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் இரும்பு தொழிற்சாலையை எந்த இடத்தில் துவக்குவது என்பது பற்றி முடிவு செய்தாகிவிட்டதா? விவரமென்ன?

(இ) நிலம் சர்வே செய்யப்பட்டுவிட்டதா? இல்லையென்றால், காரணமென்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) இல்லை.

12th August 1963]

(இ) சாத்தியமான இடங்களில் லோடு டெஸ்டு (Load Test) நடந்துவிட்டது. இந்த இடங்களில் இப்போது கான்டூர் சர்வே (Contour Survey) நடந்து வருகிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : சார், நீண்டகாலமாகச் சேலத்து உருக்காலையைப்பற்றிப் பேசி வந்தாலும் மறுபடியும், மறுபடியும் டெல்லியில் இருந்து வரும் அறிக்கைகள் இதற்குச் சாதகமாக இல்லாமல் இருப்பது பற்றி கனம் அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பத்திரிகைகளில் இப்படி மாறி மாறிச் செய்திகள் கொடுத்தால்தான் பத்திரிகைகள் விற்கும். ஆகையால், பத்திரிகைச் செய்திகளைப் பற்றி அதிகக் கவனம் செலுத்த வேண்டியதில்லை. நான் இந்தச் சட்டசபையில் கொடுக்கிற தகவல்களை மட்டும் திட்டவட்டமாக எடுத்துக்கொள்ளும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல் : சேலம் உருக்காலையில் இருந்து 3 லட்சம் டன் இரும்பு கிடைக்கும் என்றும் அது 6 கோடி ரூபாய் மதிப்புடையதாக இருக்குமென்றும், இந்த இரும்பை வெட்டி எடுக்க நெய்வேலி மின் நிலையத்தில் இருந்து 400 மெகவாட் மின் சக்தி கொடுக்கவேண்டுமென்றும், அந்த 400 மெகவாட் மின் சக்திக்கு ரூபாய் 12 கோடியாகும் என்றும் கருத்துக்கள் டெல்லியில் இருந்து வருகின்றன. அதுபற்றி கனம் அமைச்சர் அவர்களுடைய கருத்து என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : டெல்லி கருத்துக்கள் என்று பத்திரிகையில் வரும் செய்திகளை எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று சொன்னேன். மேலும், அந்த டெல்லிக் கருத்துக்கள் என்று கனம் அங்கத்தினர் கொடுத்த புள்ளிவிவரங்கள் எல்லாம் தவறு.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : சேலம் இரும்புத் தொழிற்சாலை என்ற பெயரே நடமாடி வருவதால் சேலத்திலேயே இந்த இரும்புத் தொழிற்சாலையை நிறுவ அரசாங்கம் முடிவு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நிபுணர்கள் எங்கு அமைக்க வேண்டுமென்று சொல்கிறார்களோ அங்குதான் அமையும்.

மதுரை நகரசபை.

* 103 கேள்வி.—**திரு. கரு. சீமைச்சாமி :** கனம் நகராட்சி நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை நகரசபையில் 1963-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நகரசபை சொத்து மோசடியாகி இருப்பது உண்மையா ?

(இ) ஆமென்றால், எவ்வளவு ?